**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ஜாதிவாரி கணக்கெடுப்பு ஒற்றுமைக்கான வழியல்ல!



கோதை ஜோதிலட்சுமி

**ஜாதி அடிப்படையிலும் மத அடிப்படையிலும் அரசியல் கட்சிகள் இயங்குவதைத் தவிர்க்க முடியாது. வாக்குவங்கி அரசியல் தேர்தல் அரசியலில் அடிப்படையானது. சமூக மக்களின் பலம் உறுதிப்படும்போது தங்கள் கட்சிகளுக்குள் வாய்ப்புகளைப் பகிர்ந்து கொள்வது சுலபமாகலாம்.**

# உத்தரகண்ட் சுரங்க விபத்து: சிக்கியுள்ள தொழிலாளர்களின் விடியோ வெளியீடு


உத்தரகண்ட் மாநிலத்தில் சுரங்க இடிபாடுகளிடையே சிக்கிக் கொண்ட தொழிலாளிகளின் விடியோ காட்சிகள்.


புது தில்லியிலிருந்து உத்தரகண்ட் மாநிலம் டேராடூனுக்கு விமானப் படையின் சரக்கு விமானத்தில் கொண்டுவரப்பட்ட குழாய்கள் உள்ளிட்ட 18 டன் எடையுள்ள சிறப்பு கருவிகள்.

**உத்தரகண்ட், நவ21:** உத்தரகண்டின் உத்தரகாசி சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் பணி 10-ஆவது நாளாகத் தொடர்ந்தது. இந்நிலையில், 6 அங்குல குழாய் வழியாக அனுப்பப்பட்ட எண்டோஸ்கோபி கேமராவில் பதிவான தொழிலாளர்களின் விடியோ பதிவுகள் செவ்வாய்க்கிழமை வெளியாகின.

வெள்ளை மற்றும் மஞ்சள் நிற தலைக்கவசங்கள் அணிந்துள்ள தொழிலாளர்கள் குழாய் வழியாக உணவுப் பொருள்களைப் பெறுவது, தங்களுக்கிடையே பேசிக் கொள்ளும் காட்சிகள் அந்த விடியோவில் இடம்பெற்றுள்ளன. விடியோ பதிவுகளைத் திரையில் காணும் அதிகாரிகள், தேவையான வழிகாட்டுதல்களைத் தொழிலாளர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

உத்தரகாசி மாவட்டத்தின் சில்க்யாரா பகுதியில் கட்டப்பட்டு வரும் இருவழி சுரங்கப் பாதை கடந்த 12-ஆம் தேதி ஏற்பட்ட திடீர் நிலச்சரிவைத் தொடர்ந்து இடிந்தது. சுரங்கத்தில் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கவும் அவர்களைத் தொடர்பு கொள்ளவும் 4 அங்குல குழாய் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில், 53 மீட்டர் தொலைவிலான கடுமையான இடிபாடுகளுக்கு இடையே 6 அங்குல குழாய் திங்கள்கிழமை செலுத்தப்பட்டது. இதன் மூலம் தொழிலாளர்களுக்கும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளோருக்கும் இடையே தகவல் பரிமாற்றம் மேம்பட்டுள்ளதோடு, அதிக அளவிலான உணவுப் பொருள்களையும் தொழிலாளர்களுக்கு அனுப்பமுடியும். இந்தக் குழாய் வழியாக எண்டோஸ்கோபி கேமரா அனுப்பப்பட்டது.

சுரங்கத்தில் சிக்கியுள்ள பிரதீப் கிஸ்கு என்ற தொழிலாளரின் உறவினர் சுனிதா ஹெம்பிரம் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'செவ்வாய்க்கிழமை காலையில் அவருடன் பேசினேன். அவர் நலமாக உள்ளார். ஆரஞ்சு பழங்கள் புதிய குழாய் மூலம் அனுப்பப்பட்டன. கிச்சடி உள்ளிட்ட உணவுகளும் அவர்களுக்கு அனுப்பும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

முன்பு, நாங்கள் பேசுவதைக் கேட்கவே அதிக சப்தத்துடன் பேச வேண்டியிருந்தது. தற்போது, அவர் பேசுவதைத் தெளிவாகக் கேட்க முடிகிறது' என்றார்.

மீட்புப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமியிடம் பிரதமர் நரேந்திர மோடி இரண்டாவது நாளாக தொலைபேசி மூலம் செவ்வாய்க்கிழமை பேசினார்.

அப்போது, 'அனைத்துத் தொழிலாளர்களையும் பாதுகாப்பாக மீட்க முன்னுரிமை அளிக்க வேண்டும்' என பிரதமர் மோடி அறிவுறுத்தியதாக முதல்வர் தாமி தனது 'எக்ஸ்' சமூகவலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

# தேசிய ஆடவர் ஹாக்கி: ஹரியாணா அபார வெற்றி


ஹரியாணா - சத்தீஸ்கர் ஆட்டம்.

**சென்னை, நவ. 21:** சென்னையில் நடைபெறும் 13-ஆவது தேசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப்பில் ஹரியாணா 13-1 கோல் கணக்கில் சத்தீஸ்கரை செவ்வாய்க்கிழமை அபார வெற்றி கண்டது.

சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில், 5-ஆம் நாளான செவ்வாய்க்கிழமை, முதல் ஆட்டத்தில் ஹரியாணா - சத்தீஸ்கர் அணிகள் மோதின.

இதில் ஹரியாணா 13-1 கோல் கணக்கில் வென்றது.

ஹரியாணா தரப்பில் ரஜந்த் (4', 47'), சஞ்ஜய் (10', 17', 50', 54'), கோஹினூர்பிரீத் சிங் (22', 39', 56'), தீபக் (41', 59'), அபிஷேக் (43'), முகுல் சர்மா (60') ஆகியோர் கோலடிக்க, சத்தீஸ்கருக்காக யாதவ் கார்த்திக் (49') ஸ்கோர் செய்தார்.

இதர ஆட்டங்களில் பஞ்சாப் 4-2 கோல் கணக்கில் மகாராஷ்டிரத்தையும், உத்தர பிரதேசம் 3-2 கோல் கணக்கில் புதுச்சேரியையும், ஒடிஸா 8-1 கோல் கணக்கில் தில்லியையும் வென்றன. கேரளம் - ராஜஸ்தான் மோதிய ஆட்டம் 2-2 கோல் கணக்கில் டிரா ஆனது.

போட்டியின் 6-ஆம் நாளான புதன்கிழமை குஜராத் - சத்தீஸ்கர், தாத்ரா & நாகர் ஹவேலி - பிகார், பெங்கால் - ஜம்மு & காஷ்மீர், சண்டீகர் - ஜார்க்கண்ட், தெலங்கானா - அருணாசல பிரதேசம் ஆகிய அணிகள் மோதுகின்றன.

# உளவு செயற்கைக்கோள் வெற்றிகரமாக நிலைநிறுத்தம்: வடகொரியா


(கோப்புப் படம்)

**சியோல், நவ. 21:** ராணுவ உளவு செயற்கைக்கோள் மலிங்யாங்-1 புவி வட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

கடந்த 2 முறை வடகொரியா ஏவிய இந்த உளவு ஏவுகணை தோல்வியடைந்தது. இந்நிலையில், மூன்றாவது முறையாக செவ்வாய்க்கிழமை இரவு உளவு ஏவுகணையான மலிங்யாங்-1 ஏவியதாகவும், அது புவி வட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதாகவும் வடகொரியா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான ராணுவக் கூட்டணியால் அதிகரித்து வரும் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக உளவு செயற்கைக்கோளைச் செலுத்த இருப்பதாக வடகொரியா தெரிவித்து வருகிறது.

அதன்படி, இதற்கு முன்பு இருமுறை செயற்கைக்கோளைச் செலுத்தும் முயற்சியில் வடகொரியா ஈடுபட்டது. ராக்கெட்டில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

இந்நிலையில், மூன்றாவது முறையாக கடந்த அக்டோபரில் உளவு செயற்கைக்கோளைச் செலுத்த இருப்பதாக வடகொரியா தெரிவித்தது. ஆனால், எந்தக் காரணமும் இல்லாமல் அந்த முயற்சியைக் கைவிட்டது. இப்போது மீண்டும் உளவு செயற்கைக்கோளைச் செலுத்த இருப்பதாக அறிவித்துள்ளது.

வடகொரியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு செயற்கைக்கோளை ஏவும் திட்டத்தைக் கைவிடச் செய்யுமாறு தனது நாட்டு அதிகாரிகளுக்கு ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா உத்தரவிட்டுள்ளார்.

எந்தவிதமான செயற்கைக்கோள் சோதனையையும் வடகொரியா நடத்தக் கூடாது என ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஏற்கெனவே தடை விதித்துள்ளது. தனது ஏவுகணைத் தொழில்நுட்பத்தின் மாறுபட்ட சோதனை வடிவமாக செயற்கைக்கோள் சோதனையை வடகொரியா கருதுவதால் இந்தத் தடையை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விதித்துள்ளது.

தங்கள் நாட்டைக் கண்காணிக்கும் திறனை மேம்படுத்துவதற்காக வடகொரியா உளவு செயற்கைக்கோள் சோதனையை நடத்த திட்டமிடுகிறது என தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.